**இவ்வினாத்தாளை குறிப்புகள் கொடுக்கப்படும் வரை திறக்கக்கூடாது பிரிவு அதிகாரி கூறியபின் திறக்கவும்.**

**(Open Candidates) / (பொது விண்ணப்பதாரர்களுக்குரியது)**

| வினாத்தாளின் வகை | பதிவு எண் | வினாத்தாளின் வரிசை எண். |
|---|---|---|
| | | |
| | OMR விடைத்தாளின் எண் | |
| | | |

# TNUSRB – SI 2022
# TAMIL ELIGIBILITY TEST - 02

நாள் & தேதி : வியாழக்கிழமை, 16, ஜுன், 2022 — Time / காலம் : 100 நிமிடங்கள்

நேரம் : மாலை 03:30 மணி முதல் 05:10 மணி வரை — Total Marks / மொத்த மதிப்பெண்கள் : 100

## Instructions – அறிவுரைகள்

1. This question paper contain 70 questions in part A (General knowledge) and 30 questions in part B (Psychology) related subjects.
   இவ்வினாத்தாளில் பகுதி 'அ' பொது அறிவில் 70 வினாக்களும் மற்றும் பகுதி 'ஆ' உளவியல் சம்மந்தமான பாடங்களில் 30 வினாக்களும் உள்ளன.
2. The type of question paer (A,B,C or D) should be shaded in the answer sheet using blue or black ball point pen. The answers sheet without shading the type of question paper will not be evaluated.
   இந்த வினாத்தாளின் வகையை (A,B,C or D)விடைத்தாளில் அதற்குண்டான இடத்தில் நீலம். (அ) கருப்பு நிற பால் பாயின்ட்பேனாவைக் கொண்டு எழுதி பின் பட்டை தீட்டவும். வினாத்தாளின் வகையை பட்டை தீட்டாவிட்டால், அந்த விடைத்தாள் மதிப்பிடப்படமாட்டாது.
3. Write the Registration No. using blue or black ball point pen at the appropriate box in the answer sheet.
   விடைத்தாளில், நீலம் (அ) கருப்பு நிற பால் பாயின்ட் போனவைக் கொண்டு பதிவு எண்ணை அதற்குரிய கட்டத்தில் எழுதி, பின் பட்டை தீட்டவும்.
4. Answer all the 140 questions should be shaded in the relevant circles using blue or black ball point pen.
   Answer all the 140 questions- 140 கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.
5. Each question carries half a mark. ஒவ்வொரு கேள்விக்கும் அரை மதிப்பெண் வழங்கப்படும்.
6. The answers to the question should be shaded in the relevant circles using blue or black ball point pen.
   விடைகளை நீலம் (அ) கருப்பு நிற பால் பாயின்ட் பேனாவைக் கொண்டு அந்தந்த வட்டங்களில் பட்டை தீட்டவும்.
7. For each question only one answers is to be chosen and shaded.
   ஒரு வினாவிற்கு ஒரு விடையை மட்டுமே பட்டை தீட்டவும்.
8. For wrong and improper shading, no marks will be given.
   தவறாக பட்டை தீட்டினாலோ, அடித்தல் திருத்தங்கள் செய்தாலோ அந்த கேள்விக்கு மதிப்பெண்கிடைக்காது.
9. Write the Registration No. in the question paper- பதிவு எண்ணை கேள்வித்தாளில் எழுதவும்.
10. Write the SI.No of the OMR answer sheet in the question paper at the appropriate place.
    OMRவிடைத்தாளின் எண்ணை கேள்வித்தாளில் எழுதவும்.
11. If there is any printing error in page No. in the question paper , the same should be brought to the notice of the invigilator immediately.
    உமது வினாத்தாளில் ஏதேனும் அச்சுப் பிழையே, பக்கங்கள் சரியாக இல்லாவிட்டாலோ, மேற்பார்வையாளரிடம் முறையிட்டு சரியான கேள்வித்தாளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
12. All the questions are bilinguial except language questions (English & Tamil)
    பாடப்பகுதி (ஆங்கிலம் மற்றும் தமிழ்) கேள்விகளை தவிர்த்து அனைத்து கேள்விகளும் இரண்டும் மொழிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

முப்படை பயிற்சி மையம் வேலூர், திருச்சி

## "தமிழ் தகுதித் தேர்வு"

1. உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது என்றவர்.
   A) அகத்தியர் B) தொல்காப்பியர் C) ஆரியபட்டர் D) குமரிலப்பட்டர்.

2. "பஞ்சக்கும்மிகள்" எனும் நூலைத் தொகுத்தவர்
   A) சு.சக்திவேல் B) வெங்கம்பூர் சாமிநாதன்
   C) ந.வானமாமலை D) செ.ராசு

3. தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையம் கரூர் என்று கூறியவர்
   A) கிரேக்க அறிஞர் தாலமி B) யுவான் சுவாங்
   C) பாஹியான் D) மெகஸ்தனிஸ்

4. ஆயதம் தனக்கு முன் குறிலையும் தனக்கு பின்...... பெற்று வரும்
   A) வல்லினம் B) மெல்லினம்
   C) இடையினம் D) வல்லின உயிர் மெய்

5. தமிழ்நாட்டின் மைய நூலகம்.
   A) கன்னிமாரா B) கிழ்த்திசை நூலகம்
   C) உ.வே.சா நூலகம் D) தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம்

6. மயங்கொலி எழுத்துக்கள்.
   A) 6 B) 7 C) 9 D) 8

7. கொடிமுல்லை – என்ற நூலின் ஆசிரியர்
   A) முடியரசன் B) டி.கே.சி C) வாணிதாசன் D) சுரதா

8. "குழந்தைகளைப் பாதுகாப்போம்" எனும் இயக்கத்தை தொடங்கியவர்.
   A) அன்னை தெரசா B) முத்துலட்சுமி அம்மையார்.
   C) சாவித்திரிபாய் பூலே D) கைலாஷ் சத்யார்த்தி.

9. அப்பர் தேவாரத்தில் முதலில் எடுத்தாளப்பட்ட சொல்
   A) தமிழ் B) தமிழ்நாடு C) தமிழம் D) தமிழன்

10. தமிழ்மொழியின் உபநிடதம்
   A) தாயுமானவர் பாடல்கள் B) கம்பர் பாடல்கள்
   C) சுந்தரர் பாடல்கள் D) குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்

11. கவிஞாயிறு
   A) பெருஞ்சித்திரனார் B) முடியரசன் C) வாணிதாசன் D) தாராபாரதி

12. "நாட்டுப்புற இயல் ஆய்வு என்ற நூலை தொகுத்தவர்
   A) கி.வா ஜகந்நாதன் B) நா.வானமாமலை C) சு.சக்திவேல் D) ராஜமார்த்தாண்டன்

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

13. விரைவு, சினம், அச்சம் காரணமாய் வருவது, பிரித்தால் பொருள் தருவது.
A) இரட்டைக்கிளவி B) அடுக்குத்தொடர் C) தொழிற்பெயர் D) பண்புப் பெயர்

14. "எது கொல் இது மாயை ஒன்று கொல்" என்று கூறும் நூல்
A) புறநானூறு B) அகநானூறு
C) நறுந்தொகை D) கலிங்கத்துப் பரணி

15. பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்.
A) தமிழியக்கம் B) குறிஞ்சித்திட்டு C) பாண்டியன் பரிசு D) பிசிராந்தையார்

16. "அந்தரத் தார்மய னேஎன ஐயுறும்" - இடம் பெற்ற நூல்
A) சீவகசிந்தாமணி B) சிலப்பதிகாரம் C) மணிமேகலை D) தேவாரம்

17. மகுட நிலா – நூலாசிரியர்
A) அப்துல் ரகுமான் B) கண்ணதாசன் C) மேத்தா D) ந.பிச்ச மூர்த்தி

18. ஆண்டாள் எழுதிய திருப்பாவையைத் தழுவி எழுதப்பட்ட நூல்
A) கன்னிப்பாவை B) திருவெம்பாவை C) பாவைக் கூத்து D) திருக்கோவையார்

19. தமிழ்நாடு அரசின் 'கலைமாமணி' விருது பெற்றவர்
A) மருதகாசி B) கல்யாண சுந்தரம் C) மு.மேத்தா D) ஆலங்குடி சோமு

20. "திருக்கேதார பாடலை" அருளியர்
A) சுந்தரர் B) திருநாவுக்கரசர் C) திருஞான சம்பந்தர் D) அருணகிரிநாதர்

21. "ஓடை" என்ற வாணிதாசன் பாடல் இடம்பெற்றுள்ள நூல்
A) தொடுவானம் B) கொடி முல்லை
C) எழிலோவியம் D) குழந்தை இலக்கியம்

22. 'இளைய தோழனுக்கு' என்ற பாடலின் ஆசிரியர்
A) முடியரசன் B) சுரதா C) ரா.பி.சேது D) மு.மேத்தா

23. செப்பேடுகள் கிடைக்கத் தொடங்கிய ஆண்டுகள்
A) பொ.ஆ.மு. ஏழாம் நூற்றாண்டு முதல் B) பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டு முதல்
C) பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் D) பொ.ஆ.மு. நான்காம் நூற்றாண்டு முதல்

24. தவறான இணையைக் காண்.
A) வன்தொடர்க் குற்றியலுகரம் - நாக்கு, வகுப்பு
B) மென்தொடர்க் குற்றியலுகரம் - நெஞ்சு, இரும்பு
C) இடைத்தொடர்க் குற்றியலுகரம் - மார்பு, அமிழ்து
D) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - காது, பேசு

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

25. எட்டுத்தொகை நூலில் 13 பாடல்களைப் பாடிய புலவர்
A) குடபுலவியனார் B) இளநாகனார் C) மாங்குடி மருதனார் D) நச்செள்ளையார்

26. "புனையா ஓவியம் புறம் போந்தன்ன" என்ற பாடல் அடி இடம் பெற்ற நூல்
A) மணிமேகலை B) நெடுநல்வாடை C) பரிபாடல் D) நற்றிணை

27. "வேர்பாரு, தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே" என்றவர்கள்
A) ஆழ்வார்கள் B) நாயன்மார்கள் C) பட்டினத்தார்கள் D) சித்தர்கள்

28. "கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்" என்றவர் -
A) விஜயலட்சுமி பண்டிட் B) முத்துலட்சுமி அம்மையார்
C) அண்ணை தெரேசா D) பண்டித ரமாபாய்

29. கலாமஸ் ரொடாங் - என்ற அறிவியல் பெயர் கொண்ட தாவரம்
A) மூங்கில் B) பனைமரம் C) பிரம்பு D) வேம்பு

30. தவறான ஒன்றினை அறிக.
A) இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம் - பல்லாவரம் கற்கருவி
B) ரோமனியர் பழங்காசுகள் கிடைத்த இடம் - கோவை
C) ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்த இடம் - அரிக்கமேடு
D) முதுமக்கள் தாழிகள் கிடைத்த இடம் - செம்பியன் கண்டியூர்

31. 'பாரத ரத்னா' விருதினை இந்திய அரசு எம்.ஜி.ஆருக்கு வழங்கிய ஆண்டு
A) 1988 B) 1989 C) 1990 D) 1991

32. தொகை நிலைத்தொடர்............ வகைப்படும்
A) 5 B) 6 C) 4 D) 9

33. நாட்காட்டி ஓவியங்களின் வேறுபெயர்.
A) கலம்காரி ஓவியங்கள் B) பசார் பெயிண்டிங்
C) காலக்கோட்டு ஓவியங்கள் D) நாட்காட்டி ஓவுமாக்கள்

34. "என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும், சீர்திருத்தக் கருத்திற்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள். பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையும் ஆவார்கள்" என்றவர்.
A) அண்ணா B) பெரியார்
C) இரட்டைமலை சீனிவாசன் D) முத்துராமலிங்கர்

35. "நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை" என ஏறுதழுவுதலைக் குறிப்பிடும் நூல்
A) கண்ணுடையம்மன் பள்ளு B) மணிமேகலை
C) புறப்பொருள் வெண்பாமாலை D) கலித்தொகை

36. தொல்காப்பியர் "மொழி பெயர்த்தலை" குறிப்பிடும் இயல்
A) மரபியல் B) உயிரியல் C) இடையியல் D) உருப்புணரியல்

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

37. இரா. இளங்குமரனார் தொகுத்த நூல்

A) தமிழிசை இயக்கம்
B) தமிழின் தனிப்பெரும் சிறப்புகள்
C) இலக்கண வரலாறு
D) தேவநேயம்

38. 'தலைக்குள் ஓர் உலகம்" என்ற கட்டுரை இடம் பெற்ற நூல்

A) தலைமைச் செயலகம்
B) மையம்
C) மைய உலகம்
D) உலகம் தலையிலே

39. தயிர்க்குடம், பொற்சிலை – என்பன

A) வேற்றுமைத் தொகை
B) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
C) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
D) உம்மைத்தொகை

40. "மல்லல்" என்பதன் பொருள்

A) மலைநெல்
B) சொல்லல்
C) வளம்
D) செல்லல்

41. தவறான தொடரைக் காண்.

A) அப்துல் நேற்று வருவித்தான் - தன் வினைத் தொடர்
B) உரை கவிதாவால் படிக்கப்பட்டது - செயப்பாட்டு வினைத் தொடர்
C) குமரன் மழையில் நனைந்தான் - உடன்பாட்டு வினைத்தொடர்
D) அவன் மாணவன் - பெயர்ப் பயனிலைத் தொடர்

42. பொருத்துக.

1. வியங்கோள் வினைமுற்று - (a) உ, இ
2. தொழிற்பெயர் விகுதி - (b) அ, ஆ
3. பலவின்பால் வினை முற்று - (c) அல், தல், கை
4. வினையெச்ச விகுதி - (d) க, இய, இயர்

A) 1(d) 2(b) 3(a) 4(c)
B) 1(b) 2(a) 3(d) 4(c)
C) 1(c) 2(d) 3(a) 4(b)
D) 1(d) 2(c) 3(b) 4(a)

43. சேந்தன் திவாகரம் (நிகண்டு) நூல் கூறுவது.

A) பலவகை கப்பல்களின் பெயர்கள்
B) கப்பல் மாலுமிகள் பற்றிய குறிப்புகள்
C) கப்பல் பயணம் பற்றிய கருத்துக்கள்
D) காற்று வகைகள் பற்றி

44. "இலக்கியம் அறிவைத் தரும்/ மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும்" என்று கூறியவர்.

A) பெரியார்
B) அண்ணா
C) திரு.வி.க
D) மு.வ

45. கீழ்காண்பவற்றுள் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

A) ஆய்
B) ஈர்
C) ஏன்
D) ஆர்

46. 'ஒவ்வொரு கல்லாய்' என்ற நூலின் ஆசிரியர்

A) கந்தர்வன்
B) மா. ராமலிங்கம்
C) கல்யாண்ஜி
D) சே. பிருந்தா

முப்படை பயிற்சி மையம் – வேலூர், திருச்சி

47. தவறான ஒன்றனைக் காண்.
   A) இசைவு, சாத்தியம் - பொருத்தம் ஆகிய பொருளில் வருவது - ஆம்
   B) அளவையும், காலத்தையும் குறிப்பது - எத்துணை
   C) பன்மைக்கு உரியது - அன்று
   D) எண்ணிக்கையைக் குறிப்பது - எத்தனை

48. சரியான தொடர்களைக் காண்க.
   A) விளம் முன் நிரை - நிரையொன்றாசிரியத்தளை
   B) மாமுன் நிரை, விளம்முன் நேர் - இயற்சீர் வெண்டளை
   C) காய் முன் நிரை - கலித்தளை
   D) கனி முன் நேர் - ஒன்றா வஞ்சித் தளை
   A) 1, 2 மற்றும் 3 B) அனைத்தும் C) 1, 3 மற்றும் 4 D) 2, 3 மற்றும் 4

49. பொருந்தாத ஒன்றனைக் காண்க.
   A) உருவக அணி - Metaphor B) உவமையணி – Simile
   C) அசை - Syllable D) புணர்ச்சி - Morpheme

50. "பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி எழுதப்படுவதும், படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்து கருதப்படும் மொழி என்றவர்.
   A) திரு.வி.க B) மு.வ C) மறைமலையடிகள் D) ரா.பி.சே.

51. பொருத்துக (எழுத்துக்கள் பிறக்குமிடம்)
   1) வல்லின எழுத்துக்கள் - a) மூக்கு
   2) மெல்லின எழுத்துக்கள் - b) தலை
   3) இடையின எழுத்துக்கள் - c) மார்பு
   4) ஆய்த எழுத்து - d) கழுத்து
   A) 1(c) 2(a) 3(d) 4(b) B) 1(c) 2(d) 3(a) 4(b)
   C) 1 (d) 2 (a) 3 (c) 4(b) D) 1 (d) 2(b) 3 (a) 4 (c)

52. இயற்கையின் வாழ்க்கை அனுபவங்கயையும் இணைத்து, அறிவுத் தொளிவுடன் நல்வாழ்க்கைக்கான மெய்யியல் உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள் - என்றவர்
   A) தாராபாரதி B) மு. மேத்தா C) வல்லிக்கண்ணன் D) கல்யாண்ஜி

53. பாரத ஸ்டேட் வங்கியின் இலா மென்பொருள் விநாடிக்கு எத்தனை வாடிக்கையாளர்களுடன் உரையாடும் திறன் உடையது?
   A) 1000 வாடிக்கையாளர்கள் B) 10,000 வாடிக்கையாளர்கள்
   C) 100,000 வாடிக்கையாளர்கள் D) 6000 வாடிக்கையாளர்கள்

54. "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்றவர்
   A) மு.கு. ஜகந்நாதர் B) மணவை முஸ்தபா C) ஜி.யு.போப் D) கி.வ. ஜகந்நாதன்

55. பெருமாள் திருமொழி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் அமைந்துள்ள திருமொழி
   A) ஐந்தாம் திருமொழி B) ஆறாம் திருமொழி C) நான்காம் திருமொழி D) எட்டாம் திருமொழி

முப்படை பயிற்சி மையம் - வேலூர் - திருச்சி

56. பாடலடியுடன் பொருத்துக.

1) "மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன்" - (a) மணிமேகலை
2) 'பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின' - (b) கம்பராமாயணம்
3) 'பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை' - (c) சிலப்பதிகாரம்
4) 'பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் - (d) திருவாசகம்

A) 1(c) 2(a) 3(d) 4(b) B) 1(c) 2(d) 3(b) 4(a)
C) 1(b) 2(a) 3(c) 4(d) D) 1(b) 2(c) 3(a) 4(d)

57. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலின் ஆசிரியர்
A) ஜி.யு. போப் B) கால்டுவெல் C) வீரமாமுனிவர் D) எல்லீஸ்

58. தற்போது உரைநடை வழக்கில் இல்லாமல், இலக்கியங்களில் மட்டுமே உள்ளது எது?
A) குற்றியலுகரம் B) குற்றியலிகரம் C) முற்றியலுகரம் D) ஆய்தம்

59. தமிழகத்தின் முதல்பெண் மருத்துவர்/ சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி
A) முத்துலட்சுமி அம்மையார் B) பண்டித ரமாபாய்
C) நீலாம்பிகை அம்மையார் D) ஐடா ஸ்கட்டர்

60. "மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது" என்றவர்
A) ரூஸ்வெல்ட் B) வின்ஸ்டன் சர்ச்சில் C) ஹிட்லர் D) ஸ்டாலின்

61. "எல்லாருடைய நாடுகளும் நமக்கு தாய்நாடு, நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்றும் கருதுதல் வேண்டும்" என்றவர்
A) அரிஸ்டாட்டில் B) பிளாட்டோ C) ஜி.யு.போப் D) செனக்கா

62. "தமிழ்ப்பண்பாடு" என்ற இதழைத் தொடங்கியவர்
A) பெரியார் B) பெருஞ்சித்திரனார் C) தனிநாயகம் அடிகள் D) ராஜமார்த்தாண்டன்

63. கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றைமட்டும் உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டு விடுவது.
A) உவமையணி B) உருவகஅணி
C) ஏகதேச உருவக அணி D) இல்பொருள் உவமையணி

64. தமிழை ஆட்சி மொழியாக கொண்ட நாடுகள் முறையே
A) சிங்கப்பூர், மலேசியா B) இலங்கை, சிங்கப்பூர்
C) மலேசியா, மொரீசியஸ் D) மலேசியா, இலங்கை

65. தமிழ்விடுதூது நூலின் ஆசிரியர்
A) புதஞ்சேந்தனார் B) பேயனார்
C) ஓதலாந்தையார் D) ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை

66. 'உணவெனப்படுவது நிலத்துடன் நீரே' என்று கூறும் இலக்கியம்.
A) அகநானூறு B) புறநானூறு C) பரிபாடல் D) நற்றிணை

முப்படை பயிற்சி மையம் - வேலூர் திருச்சி

67. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு மற்றும் அச்சிட்டவர் முறையே
A) 1818, தஞ்சை ஞானப்பிரகாசர்
B) 1812, சி.வை. தாமோதரனார்
C) 1818, சி.வை. தாமோதரனார்
D) 1812, தஞ்சை ஞானப்பிரகாசர்

68. தவறான இணையைக் கண்டறி?
A) அகச்சுட்டு - இவன்
B) புறச்சுட்டு – அவ்வானம்.
C) அண்மைச்சுட்டு – அவை
D) சுட்டுத்திரிபு - இந்த.

69. “ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்” என்று பாடியவர்.
A) திருவள்ளுவர் B) கம்பர் C) ஔவையார் D) கீரந்தையார்

70. “பிறவி இருளைத் துறைத்து, சூழலின் நிழலை வெறுத்து” என்ற பாடலை எழுதியவர்
A) லாவோட்சு
B) கு.ப. ராஜகோபாலன்
C) வண்ணதாசன்
D) ந. பிச்சமூர்த்தி

71. உவமையால் விளக்கப்படும் பொருள்.
A) உவமேயம் B) உவமானம் C) உவமஉருபு D) உருவகம்

72. “ஆரக்கால் முப்பதும் சக்கரத்தின்” என்ற பாடலில் வெற்றிடத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறியவர்
A) கன்பூசியஸ் B) லாவோட்சு C) தாலமி D) யூக்ளிட்

73. ‘தாவோ தே ஜிங்’ -என்ற லாவோட்சு அவர்களின் பாடலை மொழிபெயர்த்தவர்
A) சு. சக்திவேல் B) அ. கௌரன் C) கணமுத்தையா D) சி. மணி

74. “வால்காவில் இருந்து கங்கை வரை” என்ற நூலின் ஆசிரியர்
A) கணமுத்தையா B) யூமா வாசுகி C) ராகுல் சாங்கிருத்யாயன் D) ஹிஜிராபாக்

75. பொருளாகு பெயர் என்பதன் வேறுபெயர்.
A) முதலாகுபெயர்
B) சினையாகு பெயர்
C) பண்பாகுபெயர்
D) கருத்தாவாகு பெயர்

76. “நீரற வறியாக் கரகத்து” என்று கரகம் பற்றி கூறும் நூல்
A) சிலப்பதிகாரம் B) அகநானூறு C) குறுந்தொகை D) புறநானூறு

77. பொருத்துக:
1. கும்பாட்டம் - a) தேவராட்டம்
2. கரகத்தின் துணையாட்டம் - b) சேவையாட்டம்
3. 8 முதல் 13 பேர் ஆட்டம் - c) மயிலாட்டம்
4. இசைசார்புக் கலை - d) கரகாட்டம்

A) d, a, b, c B) c, a, b, d C) b, c, d, a D) d, c, a, b

78. “இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக” என்று கூறும் நூல்.
A) நாலடியார் B) புறநானூறு C) அறநெறிச்சாரம் D) பரிபாடல்

79. 24 பாடல்கள் மட்டுமே கிடைக்கப்பெற்ற ஒரு நூல்
A) முத்தொள்ளாயிரம் B) குறிஞ்சிப்பாட்டு C) பெருமாள் திருமொழி D) பரிபாடல்

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

80. பொருத்துக:

1) கூத்தராற்றுப்படை - a) 3615 பாடல்கள்
2) முல்லைப் பாட்டு - b) 105 பாசுரங்கள்
3) பெருமாள் திருமொழி - c) 103 அடிகள்
4) தேம்பாவணி - d) 583 அடிகள்

A) 1(a) 2(c) 3(b) 4(d)
B) 1(b) 2(d) 3(a) 4(c)
C) 1(d) 2(c) 3(b) 4(a)
D) 1(d) 2(b) 3(a) 4(c)

81. "மாசற விசித்த வார்புறு வள்பின்"... என்று கூறும் நூல்

A) அகநானூறு
B) புறநானூறு
C) புறத்திரட்டு
D) புறப்பொருள் வெண்பாமாலை

82. "அண்டப் பகுதியின் உண்டைப்பிறக்கம்" என்று பாடியவர்

A) சுந்தரர்
B) கம்பர்
C) மாணிக்கவாசகர்
D) திருஞானசம்பந்தர்

83. பொருத்துக:

1) நீதிவெண்பா - a) கு.ப. ராஜகோபாலன்
2) திருவிளையாடற் புராணம் - b) பரஞ்சோதி முனிவர்
3) ஞானம் - c) தி.சொ. வேணுகோபாலன்
4) ஏர் புதிதா? - d) கா.ப. செய்குத்தம்பி பாவலர்

A) 1(d) 2(b) 3(c) 4(a)
B) 1(a) 2(b) 3(c) 4(d)
C) 1(c) 2(a) 3(d) 4(b)
D) 1(b) 2(c) 3(a) 4(d)

84. திருவிளையாடற் கதைகள் ---------- காப்பிய காலம் முதல் கூறப்பட்டு வருகின்றது.

A) சீவகசிந்தாமணி
B) குண்டலகேசி
C) சிலப்பதிகாரம்
D) திருவிளையாடற்புராணம்

85. பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல்

A) பெயர்ச்சொல்
B) வினைச்சொல்.
C) இடைச்சொல்
D) திரிசொல்.

86. திருவிளையாடற்புராணத்தின் பகுப்பு முறை

A) 3 காண்டங்கள் 64 படலங்கள்
B) 5 காண்டங்கள் 63 படலங்கள்
C) 3 காண்டங்கள் 63 படலங்கள்
D) 3 காண்டங்கள் 60 படலங்கள்

87. பாக்கு என்பது எவ்வகை குற்றியலுகரம்

A) வன்தொடர்
B) மென்தொடர்
C) இடைத்தொடர்
D) தெழல் தொடர்

88. மொழிக்கு முதலில் மட்டும் வருவது

A) ஐகாரம்
B) ஔகாரம்
C) மகரம்
D) ஆய்தம்

89. சுரதா எழுதிய நூல்கள்.

A) அமுதும் தேனும், துறைமுகம்
B) துறைமுகம், பூங்கொடி
C) அமுதும் தேனும், வீரகாவியம்
D) பூங்கொடி, வீரகாவியம்

முப்படை பயிற்சி மையம், வேலூர், திருச்சி

90. ஐகாரம் மொழிக்கு முதலில் வரும்பொழுது ........... மாத்திரை அளவு பெறும்.
A) 2 B) 1 ½ C) 1 D) ½

91. பாடினான் குமரன் - என்பது —--------- தொடர்
A) எழுவாய் B) வினைமுற்று C) உரிச்சொல் D) அடுக்கு

92. தீ தீ என்பது ............... தொடர்
A) வினைமுற்று B) வேற்றுமை
C) பெயரெச்சம் D) அடுக்குத்தொடர்

93. தவறான ஒன்றினைக் காண் (பாடல் வரி – நூல்):
A) அண்டப் பகுதியின் உண்டப் பிறக்கம் - திருவாசகம்
B) அன்று அவன் அசைஇ அல் சேர்ந்து – மலைபடுகடாம்
C) வாளால் அறுத்து சுடினும் - பெருமாள் திருமொழி
D) நனந்தலை உலகம் வளைஇ - தொல்காப்பியம்

94. தமிழ்மொழியே நாட்டின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டவர்.
A) முகம்மது இசுமாயில் B) அகமது பாஷா C) ஜாகீர் உசேன் D) உஸ்மான் பாஷா

95. சந்தக்கவிமணி தமிழழகனார் எழுதிய சிற்றிலக்கிய நூல்கள்
A) 12 B) 13 C) 18 D) 14

96. முல்லைப்பாட்டு இயற்றப்பட்ட பாவினம்
A) வெண்பா B) ஆசிரியப்பா C) கலிப்பா D) வஞ்சிப்பா

97. மணிமேகலை நூலில் குறிப்பிடப்படுவது
A) ஏற்றுமதி B) இறக்குமதி C) வாணிகம் D) எண்பேராயம்

98. 268 கண்ணிகளைக் கொண்ட நூல்
A) முத்தொள்ளாயிரம் B) கலிங்கத்துபரணி C) தமிழ்விடுதூது D) நளவெண்பா

99. பொச்சை, ஆரணி, பழவம் - இச்சொற்களின் பொருள்.
A) மரம் B) காடு C) கடல் D) படகு

100. முத்துலட்சுமி அம்மையார் சென்னை அடையாரில் புற்றுநோய் மருத்துவ மனையை நிறுவிய ஆண்டு
A) 1930 B) 1932 C) 1950 D) 1952

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி